(Tamil)

1107/9191

9971 — 16 — P

நாடகராண [illegible] சு[illegible]

கிராம்போன் கொளம்பியா ரிக்கார்[illegible]

# பண்டித மோதிலால நேருவின் கீதம்.

19 AUG 1937

இரண்டாம் பாகம்

V. R. ஏழுமலைப்பிள்ளை பதிப்பித்ததாவெனப் பார்த்து வாங்கவும்.



போலிப் புத்தகங்களைக் கண்டு ஏமாறாதீர்கள்!

**V. R.** ஏழுமலைப் பிள்ளை யவர்களால்

தமது ஸ்ரீ எம்பிரான் பிரஸில் பதிப்பித்தது

ரிஜிஸ்டர்] 4-9-31 [விலை அணா 2

NATIONAL ARCHIVES LIBRARY
No 2971
Date 9-3-72
GOVT. OF INDIA

ஸ்ரீ ராமகிருஷ்ண அசோசியேஷன்,
SRI RAMAKRISHNA ASSOCIATION
கண்டனூர். KONDANOOR.

உ

ஸ்ரீ வேலுமயிலும் துணை.

# பண்டித மோதிலால்

## பாட்டு,

இரண்டாம்பாகம்.

---

காஷிகண் காக்ஷியே என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

மறக்க முடியாது
மன்னன் பகவத் சிங்கை — மற

அநுபல்லவி.

மட்டித்தனமுள்ள முட்டாள் சர்க்கார்
துஷ்டத்தனமொடு தூக்கிலிட்டதை மற

மகுடங்கள்.

சர்க்கார்நீதி கிடைக்காவாறு
தனுக்காய்வேலை முடித்தார்பாரு மற

திட்டமுடனொரு சட்டமுமிலா
திருட்டுத்தனமொடு தூக்கிலிட்டதை மற

இன்றைக்கிருப்பவர் நாளைக்கில்லை
வாழ்நாளைப்போக்கியே தூக்கிலிட்டதை மற

இராஜப்பிரதிநிதி செய்தக்கியாதி
லாகூர் ஜெயில்தனில் நடந்த அநீதி மற

சரணங்கள்.

மன்னர்மன்னர்மகதரெல்லாம் மகிமைகெட்டுப்போனதே
என்ன குற்ற மென்றுணரா இயக்கமொன்றுண்டானதே
அன்னயமுடனே மாந்தர் நிருபம் வீணானதே

சொன்னச்சொல் தவறும் புகார்கண்டு-இந்து
தேசத்திலே இவர்கென்ன தொண்டு வெகு
நன்னயமுடனே பணப்பண்டு-இனி
நடவாதாங்கில கெவர்மெண்டு

நாசமுறுங்காலம்
ஆபாச சர்க்கார் ஜாலம்
பகவத்சிங்கின் கோலம் ம

இரவிலேழுமணிக்கு தூக்கில் இடுவதற்கொருசட்டமா
இறந்தசவத்தை சுற்றத்தார்வசம் சேர்ப்பதற்கென்ன கஷ்டமா
முற்றுமறிந்தகவர்மென்டுக்கிது மூடத்தனம்பெறநஷ்டமா
பற்றினபிணத்தை ரவநதியில்விட யிவர்க்கிஷ்டமா

ஜீவகாருண்ய மில்லாத கவர்மெண்டு-இந்து
தேசமக்கள் செய்யவேண்டாம் தொண்டு

இராஜகுரு சிங்கம்
சுகதேவர் தங்கம்
தூக்கிலிட்ட பங்கம் ம

இராம பஜன ஹோரதியா என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான், தாளம்-ஆதி.

பல்லவி.

சிறைவாயில் தனில் அழுதாள்
பாரதமாதா சி

அநுபல்லவி.

கறையொன்று மில்லா காண்மூனை மூவரை
கழுத்தை அரிந்ததாலே கவலை கொண்டாள்
லாகூர்தனில் ஓ

தொகையறா.

மறதற்கு முடியாத நம்மாதாவின்
சேவைசெய்ய முயன்றதாலே
பெறதற்கு முடியாது உயிர்நீத்தார்
ராஜகுரு சுகதேவர் பாலர்மேலே
பாதற்குமஞ்சென் நம்பகைவரை
வேரறுதற்கு மஞ்சேன்
என்றுரைந்த நம்வந்தல்
பகத்சிங்கை காணோம்,

வசனம்:--இப்படி இருக்கையில் நம்பாரத மக்களின் விரத முடித்தும் கண்டவர்.

ஷை பாட்டு எடுப்பு.

குற்றமொருவர் புரிய மற்றவரையே வதைக்கும்
கொற்றமுறை நடக்கும் குவலயத்தில்
பாரதமாதா

தொகையறா.

தனக்குவமையில்லாத தன்தனயரின் சவத்தை
பத்துமாதம்சுமந்துபெற்ற தாய்தந்தை காணாமலே
தனியாகவே கொன்று சட்லஜ் நதிக்கரையில்
தகனித்த சண்டாளரை

---

காங்கிரஸ்பாட்டு 1-பாக கட்டடம் அவசியம் பார்க்கவும் விலை அணா 6

நிணக்குடல் பிடுங்குவேன் அந்நீசரை
வதைப்பே னென்று நீண்டதோர்
சூலமும் கையிலேந்தி நிற்குறாள் நமதன்னை
அவ்வற்பரை நோக்கியே வுக்ரவீரத்துடனே

வசனம். நம் பாரதமாதா இப்படி இருப்பதில்வெள்ளையர்க்கு

ஷை பாட்டு எடுப்பு.

எப்பயன் விளைந்திடுமோ எந்நிலை உகந்திடுமோ
என்றெண்ணி நம்மகாத்மா ஏங்குகிறார்
பாரதமாதா இ

## கதருடைச் சிறப்பு.

ஆனந்தக்களிப்பு.

காந்தி கதருடை தரியும் முன்
காலத்தவர் நடைபோலவே சூரியும் கா

மாந்தர்க்கபிமானம் வேணும் அப்போ
மனமகிழ சிறப்படையலாங் காணும்
ஏந்தும் விதரணைத் தோணும் அதை
எண்ணுவிடில் மனம் பின்னாலே நாணும் கா

சீக்கிரம் கிழியாது பாரும் நாள்
சென்றாலும் வலுவாக யிருக்குமே தேரும்
பாக்கியவழி பெறச் செய்யும் மிக்க
பணச்செல வில்லாமல் உள்ளூரில் நெய்யும் கா

தேசாபிமானி சொற் கேளும் நீயும்
தேசத்தோடு கூடிவாழ்குவாய் நாளும்
மோசக்கருத்தினைத் தள்ளும் நீ
முன்னுக்குவா எண்ணம் மனதினிற் கொள்ளும் கா

கையினால் நூற்றிட்ட இழையே இந்த
காசினியோராரும் சொல்லார்கள் பிழையே
மெய்யில் தரித்திட உழையே நாம்
முன்னுக்கு வந்திட இதுநல்ல வழியே கா

பஞ்சை யிழையாக்கி பாவு கண்டை
பற்றி சுற்றி நெய்யமனதிலே தாவு
கொஞ்ச கொஞ்சமாக மேவு அது
கொண்டுவருமுன்னுக் கென்றேநீ கூவு கா

## மீனாக்ஷி ரமண வர்ணமெட்டு.

### ஆதி தாளம்.

ஆப்த சினேகம் அஹிம்சா தர்மம் ஆ
பேப்பரில் போட்டி பெலத்திடமூட்டி
பிந்துவதோபொருள் சிந்துவதோமதி
இந்துவதோவிடு இந்தியரே நமக்கா ஆ

கோபத்தை மூட்டும் கோர்ட்டதை காட்டும்
கோர ஜெயிலிக் கேறபயில்வீர்
வீரச் செயலில் தேறத்தெளிவீர் ஆ

சுதந்தரக் கூட்டம் சூழும்போராட்டம்
சூட்டும் துணிவதை சாட்டும் தணிவது
நாட்டும் புகழ்பெற கூட்டும் புவியினில் ஆ

கோதண்டமேந்தி கோமகன் காந்தி
கூறும் யிதமொழி சேரும் அகமகிழ்
வாரும் நமதறி வோரும் துதிபுரி ஆ

பாடகர் கொண்டாடும் பாரத நாடும்
பரிதபித்திட சிறை புகுந்திட

---

வி. ஆர். ஏழுமலைப்பிள்ளை யவர்களால் பதிப்பித்த கிராம்போன் சங்கீதக்களஞ்சியம் 8ர்பாகம் விப்ளவண்ட் அவசியம் பார்க்கவும்.

வரை திருத்திடு முறை கொடுத்திடும் ஆ
காருண்ய தெய்வம் காந்தியின் அம்சம்
கண்ணை விழித்திட உண்மைஜெனித்திட
நண்மை யறிந்திட சின்ன மணிக்கருள் ஆ

## குமாரகுருபர சிவனே என்ற மெட்டு.

இராகம்-தேசிகம், தாளம்-ஆதி.

கண்ணிகள்.

தேசவபி மானி காந்தி
சொல்வதை கவனி ஜாதி
நேசவழியிற் றுணி பாரத
தேவியடியைப் பணி சுதேச தே
ஜாதிபேதந் தள்ளு சன்
மார்க்கவழியை நில்லு ஜெக
நீதிமார்க்கம் கொள்ளு இரு
ளானதெல்லாம் வெல்லு சுதேச தே
கள்ளு குடியாதே சீட்டா
கஞ்சாபிடி யாதே செய்தால்
தள்ளமுடி யாதே உன்குல
முழுதும்வெடி யாதே சுதேச தே
அடிமைத்தொழில் போக்கு கையால்
ஆகும்வேலை நோக்கு அது
உரிமையே னுமக்கு உப
தேசம்செய்தே நமக்கு தே

வி.ஆர். வடிமலைப்பிள்ளை அவர்களால் பதிப்பித்த பழூன்ஷண்முகம் பாட்டு எல்லாபுத்தக கடைகளிலும் கிடைக்கும்

அன்னியர்துணி யகற்று உள்ளூர்
கதருடையை யுடுத்து தேசம்
கண்யம்பெற உழைத்து கடைத்
தேறும்வழியை நிறுத்து தே
இராட்டினங் கொண்டு பஞ்சை
யிழையைசெய் முயன்று நல்ல
வேட்டிசெய்து கொண்டு பெரும்
வர்த்தகம்செய் கண்டு தே

பாரினிலே புகழ் பாரத புத்திரரே என்ற மெட்டு.

பல்லவி.

காருண்ய சாதுமகான் காந்தி கைராட்டினம்
கண்ணன் கைசக்ராயுதம் கா

அநுபல்லவி-

கோரும் சுயாஷிக்குக் கூடுங்கள் நாடுங்கள்
கூர்மைச்சுதந்தர கோர்ட்டுக்குள் வாருங்கள் கா
சற்குருகாந்தியின் தக்க உபதேசமே சாரும்பிரகாசமே
இனி மக்களைப் பக்குவபடுத்த
இறைவன் காந்தியும் சிறையை நீந்தினார் கா
சீக்கிரம் தீண்டாமைதன்னை ஒழித்திடுங்கள் சித்திபெறுங்கள்
மூர்ச்சமில்லாமலே இந்து முஸ்லீம்கள்
முக்கிய ஒற்றுமை மாற்கம் கொள்ளுங்கள் கா

---

வி. ஆர். ஏழுமலைப்பிள்ளை அவர்கள் பதிப்பித்தகாங்ரஸ் தொண்டர் மறியல்பாட்டு 1-2 பாகம் பார்க்கவும்.

அத்தனை கஷ்டமும்யார்பொறுப்பார்புவியில்ஜயோஜெயிவி
செத்துமடிவதை கார்த்திடும் மகாத்மா (ல்
செஞ்சரணம் பணிசெய்யுஞ் சின்னமணி கா

---

## கதர் நூல் பாட்டு.

சூழ்ந்தசர்க்கார் சுற்றுவோம் துணிந்த கதர் நூலே
வாழ்ந்திடும் சுதேசமே மகாத்மா காந்திக்கு
ஜே! ஜே!! ஜே!!!

பாரதத்தாய் அம்பிகை பஜனை பாடுவோமே
பாரதப் பண் மாதபத்ம மகாத்மாகாந்திக்கு
ஜே! ஜே!! ஜே!!!

காங்கிரஸில் கெம்பீர கதர் பிரமானந்தம்
மாம்பழத்தேன் வேல்சாமிசொல் மகாத்மாகாந்திக்கு
ஜே! ஜே!! ஜே!!!

---

## ஆனந்த மானந்தம் என்றமெட்டு.

பல்லவி.

ஆனந்தமான விவேகா னந்தா அரு
ளானந்தம்கொண்டு லகஞ் சிறந்தாய ஆ

அநுபல்லவி.

ஞானந்தனில் விளைந்த சித்தர்
மோனந்ததும்பிய முத்தர் இந்து மந்திர ஆ

---

நாகரீக பபூன் பாட்டு விலை அணா 2.
எல்லா புத்தககடையிலும் கிடைக்கும்.

சரணம்.

எண்ணம்பெரிதென்ற வாசகஞாயம்
மன்னமுதமே வைப்பதுபாயம்
இன்னந்துலங்கிடும் இந்துசகாயம்
தந்தமதவிந்தை யுலகந்தனிலுகந்த தெனும்
இந்திய ரவீ வேதாந்த உருவே
எங்கும் ப்ரசங்கம் பொழிந்த குருவே
பந்தவிடக்கடந்த ஞானத்தின் மருவே
பதமுனது சதமெனது மதியினிது நிதமுயற
லண்டனமரிக்கா தேசத்தில் வாதம்
லக்ஷக்கணக்கான கூட்டத்தில் யோதம்
கொண்டுபுகட்டிய தன்மதநீதம்
திருமொழிஎன்றருகிடவே அருள்மொழியங்குயர்பெறவே
இராமகிருஷ்ணபரம ஹம்சருபதேசம்
நாட்டிநீதி ஓதினுய் மந்திரவாசம்
க்ஷேமம்பெற விந்திய தேசம்
சின்னமணியம்பு பணிகின்ற தங்கொற்கனி ஆ

---

வேலாயுதக்குமாரா வேலாயுதா என்ற மெட்டு.

பல்லவி.

காந்திமகான் மகாத்மா காந்திமகான்

அநுபல்லவி.

காந்தகுண தங்கமே
சகலகலைச் சிங்கமே
சாதகம்பலவே செய்கின்று
தீதகற்றிடும் திருவருள் ஞான கா

தொகையறு.

இந்தியரின் தெய்வமே ஏழைகள் பங்காளனே
இன்பசுகம் மறந்த ஐயனே
நந்தேயம் போற்றும் நாதனே
நற்குண ஞான மெய்யனே

ஒடி அநுபல்லவி எடுப்பு.

விலையில்லா மாணிக்கமே
விரும்பு வோர்க்கருள் குணமே
வித விதத்தமிழ் நிதம்நிதம் புகல்
பலவிதக்கலை பயின்று சிறந்த கா

---

இராகம்-வசந்தா, தாளம்-ஆதி

பல்லவி.

கதர்கப்பல் கொடி தோணுதே
காம்சந்ர மோகனதாஸ் காந்தி இந்தியசுதேச க

அநுபல்லவி.

ஆதியிலே ஞானவாசம்
ஆகிய பாரததேசம்
இதற்குள் ஜீவப்பாகாசம்
இனிநமக்கே சந்தோஷம்

சரணம்.

மானிடச்சிப்பிக்குள்ளே மஹாத்மா ஒருமுத்துபோல
ஞானவிரதங்கொண்டு நம்மைகார்க்கவந்ததாலே
லௌகீகம் விட்டால்
வைதீகம்
நன்றாய்க்கொள்வோம் நாகரீகம் க

விக்டோரியா ராணியம்மா விடைதந்த நியாயம்சும்மா
உத்தியோகவக்கிலெல்லாம் ஊமையோபேசார்களம்மா
உதவாதே கட்சி
மிகவாதே
ஒத்துழைத்தலத் யாவசியம் க

---

இராக-வராளி, தாளம்-ஆதி.

பலலவி-

கைராட்னமாம் அம்மா கைராட்னமாம் நமது
காந்திமகான் சொன்ன கைராட்னமாம் (கை)
வையத்தில் உள்ளவர்கள் ஆதியில்
வழங்கிவந்த நல்ல கைராட்ணமாம் கை

மகுடங்கள்.

கதிரிணிந்திடில் வெற்றி கொடுத்திடும்
கத்தர் மெச்சிடும் சுதேசி நலம்பெற
சித்தரஞ்சன தாசர்மகிழ்ந்திடும் கை

வருடமொன்றுக் கறுபதுகோடி
மதிப்புரூபாய் நமக்குலாபம்
தருமாம் பெண்கள் நிருவானமதை
தடுத்துமானம் கொடுக்கவந்த கை

தொகையரு.

ஒருபருத்திசெடி நூறுசேர் பருத்தி விளையுது அதில்
ஒருவருக்கு கால் சேர் போதும் அதை
நூல்நூற்று இடையில் தரித்தால்

இரண்டு வருடத்திற்குதவுது ஒருவருக்கு
இருபதுகோடி லாபமுண்டு
அதனால் மதிப்புமுண்டு கௌவரவமுண்டு
ரோஷமுண்டு தைரியமுண்டு இதைப்பெருகுவீரே கை

---

## கே. வி. மீனாக்ஷிசுந்தரம் செட்டியாரவர்கள்

இயற்றிய

## மதுவிலக்கு கீதம்.

பண்டித மோதிலால் நேருவை என்றமெட்டு

பல்லவி.

கள்ளைக்குடிப்பதா லய்யோ கலகமுண்டாமே
கலகமுண்டாமே நம் கருணையும்போமே கள்

அநுபல்லவி.

நாடும்புகழை யழித்தே
நாட்டுவறுமையை சேர்த்தே
நானிலத்திலுள்ளவர்கள் நகைத்திடசெய்தே
நன்மனதைகெடுக்கும் சொந்தநங்கையரை மறக்கும் கள்

தொகையறு.

பஞ்சமா பாதகத்திற் பாழ்குடியே
பெரிதென பகன்றனர் மூதோர்
சஞ்சலத்திற்காளாக்கி சதிசெய்யும் பொல்லா
சாராய மெனும் குடியே

---

விலாசம்:-வி. ஆர். ஏழுமலைப்பிள்ளை 189, வால்டாக்ஸ்ரோட் சௌகார்பேட்டை போஸ்ட் மதராஸ்.

தாரமொடு தாய்தங்கை யெனுமுறையை
தாண்ட செய்திடுங் குடியே
ஆதலாலனைவரும் அக்குடியினை
அருந்துதல் பெரும் பாவமே

பாட்டு.

பொறுமைதனை போக்கும் ஐயோ!
சிறுமைதனை தாக்கும் மெய்யே
பார்தனிலே புகழழிக்கும் பாழானகள்ளே
பார்த்தவர்நகைக்க செய்யும் பாழானகள்ளே கள்

தொகையறு.

போதையைதந்து நற்புத்தியை நீக்கும்பாவி
பொல்லாத கட்குடியே
வேதையையீந்து வீணரைச்சேர்த்து மிக
வாதையை தரும் வம்பான குடியே
தீதானகஞ்சாவபின் சிந்தையையழிப்பதாலே
சிறுவனு மெடுத்தோதினேன்

பாட்டு.

காந்தி மஹான் சொல்லை
கண்டே குடியை தள்ளே
செந்தமிழ்கவி மீனாக்ஷிசுந்திரம்
செப்பினதறி மெஞ்ஞானமந்திரம் கள்

---

பணக்கொழுப்பு என்னும் ஓர் சிறிய நாவல்
விலை அணா 2. எல்லாபுத்தககடையிலும் கிடைக்கும்.

கே. டி. ஆர். வேணு கோபால் தாஸ் இயற்றியது.

பாரதமாதா கீதம்-

நம்பிக்கைகொண்டெல்லோரும் என்றமெட்டு.

பாரதமாதா பதமலரடியினை
பாடிபோற்று வோம்
பாடிபோற்று வோம் பதம்
தேடிபோற்று வோம் பார

பாரினில்புகழ் வைராக்யம்
பாடுபட்டார் மகான்மிக யோக்யம்
பாவலர்நாவலர் ஆவலாய்போற்றும்
தேவியடிபணிவோம் இனி பார

தொகையரு.

தமிழ்நாட்டு மக்களெல்லாம் ஒன்றாய்கூடி
சுற்றுவோம் நாட்டைதேடி
பூமியிலே காந்திமகான் சொன்னவாக்கை
பிடிவாதமாக நாம்பாடி

தேசியமேநம்சுய ராஜ்யம்
தீரமாய்ஓட்டுவீர் அன்னிய ராஜ்யம்
கீதம்வேணுகோபால் பதமதை
கூடிபோற்றுவீர் பார

---

இராகம-சிந்துபைரவி, தாளம்ரூபகம்.

பல்லவி.

கர்னாடகத்தனிலே கைவிளங்கும் மெய்விளங்கும்